# "கிழக்கிலங்கை வரலாறு பற்றிய பாளி இலக்கியங்களும் தொல்பொருள் சான்றுகளும் - ஓர் மதிப்பீடு

முழுப்பெயர் : தருமலிங்கன் ஹிரவுஞ்சன்

பதிவிலக்கம் : EU/IS/2018/AC/300

சுட்டிலக்கம் : CS8700

FAC1552

Project Report
Main Library, Eastern University, Sri Lanka

LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA

இவ்வாய்வு கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை

கலை கலாச்சாரபீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2024.

# ஆய்வுச் சுருக்கம்


பௌத்த சமயத்தின் பரவலோடு பாளி மொழியில் பல இலக்கிய முயற்சிகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டன. அனுராதபுர, பொலநறுவை இராசதானியில் பௌத்த சமயத்தின் வளர்ச்சி பற்றிப் பேசுகின்ற பாளி இலக்கியங்கள் ஆங்காங்கே நாட்டின் ஏனைய பிராந்தியங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இதன்படி கிழக்கிலங்கை வரலாற்றை கட்டமைத்துக் கொள்வதில் தொல்பொருள் சான்றுகளை போல இலக்கிய சான்றுகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியவற்றில் ஆரம்பகாலம் முதலாக கிழக்கிலங்கையோடு தொடர்புடைய அரசியல், பொருளாதார, சமய, சமூக விடயங்கள் கூறப்படுகின்றன. பாளி இலக்கியங்கள் கூறும் இந்த வரலாற்று செய்திகளை பல்வேறு தொல்பொருள் சான்றுகள் உறுதிப்படுத்துவதும் முக்கியமானதாகும். எனினும் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்று செய்திகளுக்கு அப்பால் பல வரலாற்று தகவல்களை வெளிப்படுத்தும் சான்றுகளும் கிடைக்கின்றன. இந்த பாளி இலக்கிய குறிப்புக்களின் அடிப்படையில் நோக்கும் போது இலங்கையின் பூர்வீக குடிகளான இயக்கர், நாகர் போன்றோர்களும் கிழக்கிலங்கையில் பரவியிருந்ததுடன், கிழக்கிலங்கையின் தீகவாவி, திருகோணமலை, கொட்டியாரம், சாகமம், இலகுகலை, விந்தனைப்பற்று, கந்தளாய், போன்ற பல பிரதேசங்கள் முக்கியத்துவம் உடையனவாக இருந்தமையை அறியலாம். பௌத்த சமயத்தை முதன்மைப்படுத்தி பேசுகின்ற பாளி இலக்கியங்களில் ஆங்காங்கே கிழக்கிலங்கையில் நிலவிய இந்துசமய, சமண வழிபாட்டு முறைகள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. கதிர்காம சத்திரியர்கள் எனும் கிழக்கிலங்கையின் தனித்துவமான ஆட்சியாளர்கள் பற்றி மகாவம்சம், தீபவம்சம் என்பன குறிப்புக்களை தருகின்றன. அநுராதபுர இராசதானி காலத்தில் உரோகணை இராச்சியத்தோடு இணைந்திருந்த இன்றைய அம்பாறை மாவட்டத்தை சார்ந்திருந்த கிழக்கிலங்கை பகுதிகள் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் சோழராட்யினால் ஏற்பட்ட மாறுதல்களை தொடர்ந்து மத்தியகாலத்தில் கிழக்கிலங்கையில் திருகோணமலையும் அதனை சார்ந்திருந்த பிரதேசங்களும் முக்கியத்துவம் உடையனவாக மாற்றமடைந்து கொண்டன. பாளி இலக்கியங்கள் கூறும் கிழக்கிலங்கையோடு சம்பந்தப்பட்ட வரலாற்றுத் தகவல்கள் முக்கியத்துவமுடையனவாக காணப்பட்டாலும், கிழக்கிலங்கையின் முழுமையான வரலாற்றை கட்டியெழுப்பக் கூடிய போதியளவு வரலாற்றுத் தகவல்கள் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்களில் காணப்படவில்லை என்பதும் முக்கியமானதாகும்



திறவுச்சொற்கள் : கிழக்கிலங்கை, பாளி இலக்கியங்கள், புராதனகாலம், மத்தியகாலம்,

## பொருளடக்கம்


முன்னுரை............................................................ I

நன்றியுரை........................................................... II

ஆய்வுச் சுருக்கம்............................................... III

சுருக்க குறியீட்டு விளக்கம்................................ V

1. ஆய்வு அறிமுகம் ............................................. 1-7

2. பாளி இலக்கியங்கள் பற்றிய அறிமுகம்.................. 8-27

3. புராதனகால கிழக்கிலங்கையின் வரலாறு............... 28-81

4. மத்தியகால கிழக்கிலங்கையின் வரலாறு.............. 82-105

5. முடிவுரை........................................................ 106-114

உசாத்துணைகள்................................................ 115-117